மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: நட்டம் 40 லட்சம் இல்லை. 29 லட்சம் ஏற்பட்டிருக்கிறது. 1959-இல் இருந்து இந்த நட்டம் ஏற்பட்டிருக்கிறது. அதற்காக நிர்வாக அதிகாரிகள்மேல் நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. காரணம் 8 சதவிகிதம் தான் சம்பளம் கொடுக்கலாம். ஆனால் இங்கே 11 சதவிகிதம் வரை செலவழிக்கப்பட்டிருக்கிறது. நிர்வாகம் சரியில்லாத முறையில் இருந்த காரணத்தினால் அதை கோவை சிறப்பங்காடி நிர்வாக அமைப்போடு, புதிய நிர்வாகம் துவங்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இதில் வழக்குத் தொடர ஏன் இவ்வளவு காலதாமதம்? காலதாமதம் ஏற்பட்டால் வழக்குச் சிராக நடக்காது. ஏன் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: என்றைய தினம் ஆடிட் பண்ணி சீர்கேடு கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதோ, அந்த தினமே அந்த அதிகாரியின்மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

லால்குடி கூட்டுறவு வேளாண்மை விற்பனைச் சங்கம்.

*469 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) லால்குடி கூட்டுறவு விவசாய மார்க்கெட்டிங் சங்க டைரக்டர்கள் போர்டு 1973 நவம்பர் மாதம் கலைக்கப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணம் என்ன?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) லால்குடி சிவஞானம் கூட்டுறவு வேளாண்மை விற்பனைச் சங்கக் குழு சங்க அலுவல்களை நடத்தியதில் முறைகேடுகள் காணப்பட்டதன் விளைவாக திருச்சிராப்பள்ளி, கூட்டுறவுச் சங்கங்களின் இணை இயக்குநரால் 1973 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் இந்தக் குழு கலைக்கப்பட்டது. சங்க அலுவல்களில் இக்குழு கீழ்க்காணும் முக்கிய தவறுகளை இழைத்தது :—

(1) விற்பனையில் செய்த முறைகேடுகள் ;

(2) வெளிச்சந்தையில் உரங்கள் வாங்கியதில் முறைகேடுகள்.

(3) "ஆயில் எஞ்சின்கள்" விற்பனையில் முறைகேடுகள்.

(4) சங்கக் கட்டிட நிதியைத் தவறாகப் பயன்படுத்தியமை.

(5) சங்கப் பொது நலநிதியைத் தவறாகப் பயன்படுத்தியமை.

1974 மார்ச் 19]

சங்கத்தின் முறைகேடுகளைக் களையவும், அச்சங்கம் சிறந்த அடிப் படையில் இயங்கச் செய்வதற்கும் திருச்சிராப்பள்ளி கூட்டுறவுச் சங்கங் களின் துணைப்பதிவாளர் அச்சங்கத்தின் தனி அலுவலராக நியமிக்கப் பட்டுள்ளார்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: சம்பந்தப்பட்டவர்கள் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா? இதுவரை எடுக்கப்படவில்லை என்றால் அதற்கான காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அதைத்தான் நான் சொன்னேன். தவறுகள் என்ன என்ன நடந்திருக்கிறது என்பதைக் கண்டுபிடித்து சார்ஜ் பண்ண ஸ்பெஷல் ஆபீசர் போடப் பட்டிருக்கிறார்கள். தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றன. அதற் கான நடவடிக்கை தொடர்ந்து எடுக்கப்படும்.

தொழிலாளர் கல்வி நிலையங்கள்.

*507 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தொழிலாளர்கள் கல்வி திட்டத்தின் கீழ் 1972 வரை மத்திய அரசு தமிழகத்திற்கு எவ்வளவு தொகை அளித்துள்ளது?

(இ) இத்திட்டத்தின் கீழ் தமிழகத்தில் எத்தனை பிராந்திய நிலையங் கள் நிறுவப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) & (இ) அவைமுன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இந்தப் பணிக்கு மத்திய அரசாங்கம் தொடர்ந்து உதவி செய்து வருகிறதா? நடப்பு ஆண்டுக்கு எவ்வளவு தொகை ஒதுக்கித் தந்துள்ளது என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மத்திய அரசு தொடர்ந்து உதவி செய்து வருகிறது. 1972–73க்கு ரூ 6,21,276·33 மத்திய அரசு வழங்கியுள்ளது.

திரு. சு. துரைசாமி: இதனால் பயன்பெற்ற தொழிலாளர் களின் எண்ணிக்கை எவ்வளவு? இந்தத் தொகையை இன்னும் அதிகமாக மத்திய அரசு தருவதற்கு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

@ 653-655ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.